நவம்பர் – 06

TNPSC துளிகள்


- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரஃபேல் மரைன் போர் விமானமானது, இந்தியாவின் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தில் முதல் முறையாக தரையிறங்கி புறப்பட்டது.
- மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள திலாரி பகுதியில் டைகாராக்ஸ் திலாரியென்சிஸ் என்ற புதிய நுண்ணிய நில நத்தை இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
  - இது மேற்குத் தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதிக்குச் சொந்தமான டைகாராக்ஸ் இனத்தின் இரண்டாவது அறியப்பட்ட இனமாகும், இதற்கு முன்னதாக டைகாராக்ஸ் தேவ்ரைவாசி என்ற இனம் கண்டுபிடிக்கப்பட்டது.
- கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய மல்யுத்த வீராங்கனை மனிஷா பன்வாலா பெண்களுக்கான 59 கிலோ ஃப்ரீஸ்டைல் பிரிவில் தங்கம் வென்றார்.
- கூகுளின் சன்கேட்சர் திட்டமானது, ஜெம்மா 4 AI மாடலை ஒரு செயற்கைக்கோள் மாதிரியில் வெற்றிகரமாகச் சோதித்ததில் இடம்பெற்றுள்ள டென்சர் செயலாக்க அலகு-ஐப் (TPU) பயன்படுத்தி AI-ஆல் உருவாக்கப்பட்ட பதிலை பூமிக்குத் திரும்ப அனுப்பியதுடன் விண்வெளி அடிப்படையிலான AI கணினியின் சாத்தியக்கூறுகளை நிரூபித்துள்ளது.
- டெல்லி மற்றும் கவுகாத்தியை இணைக்கும் அதிவேக ரயில் திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளார்.
  - உத்தரப் பிரதேசம், பீகார் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய டெல்லி-ஆக்ரா-கான்பூர்-லக்னோ-அயோத்தி-வாரணாசி-பிரயாக்ராஜ்-பாட்னா-சிலிகுரி-கவுகாத்தி ஆகியவை இத்திட்டத்தின் உத்தேச வழித்தடமாகும்.

தமிழ்நாட்டுச் செய்திகள்


இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வாக்குச்சாவடி சீரமைப்பு வழிகாட்டுதல்கள்

- புகைப்பட வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கத் திருத்தத்தின் ஒரு பகுதியாக இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மேற்கொண்ட சீரமைப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 75,032-இல் இருந்து 75,088 ஆக உயர்ந்துள்ளது.
- மொத்தம் 134 புதிய வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளன மற்றும் 78 வாக்குச்சாவடிகள் இணைக்கப்பட்டுள்ளன, இதன் விளைவாக 56 வாக்குச்சாவடிகள் அதிகரித்துள்ளன; 357 வாக்குச்சாவடிகளின் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன, மேலும் 491 வாக்குச்சாவடிகளில் பிரிவுகள் சீரமைக்கப்பட்டுள்ளன.
- காவல் நிலையங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் அல்லது பிற வழிபாட்டுத் தலங்களுக்குள் வாக்குச்சாவடிகள் அமையக்கூடாது; அரசியல் கட்சி அலுவலகங்கள் குறைந்தது 200 மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும்.
- ஒரு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒரே தேர்தல் பிரிவு மற்றும் வாக்குச்சாவடியில் வைக்கப்பட்டுள்ளனர்.

- 234 வாக்காளர் பதிவு அலுவலர்கள் (ERO) மற்றும் 38 மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (DEO) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பிறகே இந்த சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.



மழைநீர் சேகரிப்பு வழிகாட்டுதல்கள்




- தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு (RWH) கட்டமைப்புகளை கட்டமைத்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான வழிகாட்டுதல்களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை வெளியிட்டது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நிபுணர் குழு அளித்த முன்மொழிவுகளின் அடிப்படையில் இந்த வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- மாநிலம் முழுவதும் இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்களும், உள்ளாட்சி அமைப்புகளும் அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டு முதல் மழைநீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- உள்ளூர் மண்ணின் தன்மை மற்றும் கட்டிட வகைகளின் அடிப்படையில் மேற்கூரை மழைநீர் சேகரிப்பு, திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் உறிஞ்சுகுழிகள் ஆகியவற்றை அமைப்பதற்கான விவரங்களை வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன.
- நிலத்தடி நீர் செறிவூட்டலை மேம்படுத்த தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் தூர்வாரப்பட வேண்டும்.

தேசியச் செய்திகள்

புனஹ் பரன் அலைபேசி செயலி

- இந்தியா முழுவதும் அறிவியல் பூர்வமான நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டமிடலை வலுப்படுத்துவதற்காக 'புனஹ் பரன்' அலைபேசி செயலி மற்றும் அதன் இணையதளத்தை மத்திய ஜல் சக்தி அமைச்சர் அறிமுகப்படுத்தினார்.
- இது செயற்கை நிலத்தடி நீர் செறிவூட்டலை (ARS) கிராம அளவில் திட்டமிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புவியியல் முடிவு-ஆதரவு செயலையாகும்.
- பாஸ்கராச்சார்யா விண்வெளி பயன்பாடுகள் மற்றும் புவி-தகவலியல் தேசிய நிறுவனம் (BISAG-N) மற்றும் தேசிய நீர் திட்டம் (NWM) ஆகிய இரண்டும் இணைந்து இந்த செயலியை உருவாக்கியுள்ளன.
- இது பயனரின் இருப்பிடத்திலிருந்து 3-கிமீ சுற்றளவுக்குள் நிலத்தடி நீர் செறிவூட்டக்கூடிய பகுதிகளை அடையாளம் காண்கிறது.
- உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் தடுப்பணைகள், செறிவூட்டல் கிணறுகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் உட்செலுத்துக் கிணறுகள் போன்ற பொருத்தமான கட்டமைப்புகளை இது பரிந்துரைக்கிறது.
- மழையளவு, நிலத்தடி நீர் மட்டம், நீர்நிலை வளம், நிலச் சரிவு மற்றும் வடிகால் வலையமைப்புகள் போன்ற பல்வேறு புவியியல் தரவுகளை ஒருங்கிணைத்து இடங்களைத் தேர்வு செய்கிறது.



சர்வதேச மக்காச்சோள மாநாடு 2026

- முதலாவது சர்வதேச மக்காச்சோள மாநாடு (IMC) 2026 ஆம் ஆண்டு தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் தொடங்கியது.
- "மாறிவரும் உலகில் உணவு, தீவனம், உலர் தீவனம், எரிபொருள் மற்றும் நிலைத்தன்மைக்கான சோளப் புரட்சி" (M4FS) என்பது இந்த மாநாட்டின்

கருத்துருவாகும்.

- தற்போதுள்ள உணவு, தீவனம், உலர் தீவனம் மற்றும் எரிபொருள் ஆகிய 4F கட்டமைப்புடன் விவசாயிகளைச் சேர்த்து 5F கட்டமைப்பை இது அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட கலப்பினங்கள் மற்றும் அறிவியல் பூர்வமான பயிர் மேலாண்மை மூலம் 2036 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மக்காச்சோள உற்பத்தியை 55 மில்லியன் டன்களில் இருந்து 75 மில்லியன் டன்களாக உயர்த்துவதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பருவநிலை-தாங்கக்கூடிய மற்றும் உயிரி செறிவூட்டப்பட்ட கலப்பினங்கள், காரிஃப், ரபி மற்றும் வசந்த காலங்களில் உத்திசார் பயிர் மண்டலம், மற்றும் பொது கலப்பின விதை கிடைப்பதை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை இது ஊக்குவிக்கிறது.
- மக்காச்சோள சாகுபடி பரப்பளவில் இந்தியா உலக அளவில் நான்காவது இடத்தில் உள்ளதுடன், உலக மக்காச்சோள உற்பத்தியில் சுமார் 3.3% - 4% பங்களிக்கிறது.



சர்வதேசச் செய்திகள்

ஐ.நா. அமைதி காக்கும் பணிக்கான தூதரகத் திட்டத்தின் முடிவு – சோமாலியா



- சோமாலியாவில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த அமைதி காக்கும் பணிகளை நிறைவு செய்ததன் மூலம், ஐக்கிய நாடுகள் சபை (UN) தனது அரசியல் தூதரகத்தை முடித்துக்கொண்டது.

- 1995 ஆம் ஆண்டில் சோமாலியாவுக்கான ஐக்கிய நாடுகளின் அரசியல் அலுவலகமாக (UNPOS) இப்பணி தொடங்கியது.
- ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஆதரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் ஐ.நா பாதுகாப்பு சபையால் சோமாலியாவுக்கான ஐக்கிய நாடுகளின் உதவித் தூதரகம் (UNSOM) நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில், UNSOM-ஆனது இரண்டு ஆண்டு மாற்ற காலத்திற்காக சோமாலியாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மாற்று உதவித் தூதரகம் (UNTMIS) என மறுபெயரிடப்பட்டது.
- இத்தூதரகத்தின் பொறுப்புகள் சோமாலிய நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.
- அல்-கொய்தாவுடன் தொடர்புடைய அல்-ஷபாப் தீவிரவாதக் குழுவின் தொடர்ச்சியான பாதுகாப்பு சவால்களுக்கு மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாநிலச் செய்திகள்

கர்நாடக மாநிலக் கொடிக்கான அங்கீகாரம்



- மஞ்சள் மற்றும் சிவப்பு நிறம் கொண்ட கன்னடக் கொடிக்கு அதிகாரப்பூர்வ மாநிலக் கொடி அந்தஸ்து வழங்க மாநில அரசு உத்தேசித்துள்ளதாக கர்நாடக முதலமைச்சர் அறிவித்தார்.
- இந்த மஞ்சள் மற்றும் சிவப்பு நிறக் கொடியானது கன்னட மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் கன்னடர்களின் அடையாளத்தைக் குறிக்கிறது.
- தேசியக் கொடி விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்யும் அதே வேளையில், கொடியின் வடிவமைப்பு, காட்சிப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சட்டக் கட்டமைப்பை உருவாக்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், சித்தராமையா தலைமையிலான அரசு, மஞ்சள், வெள்ளை மற்றும் சிவப்பு நிற பட்டைகளுடன், கண்டபேரண்டா இலச்சினையுடன் கூடிய மாநிலக் கொடி வடிவமைப்பிற்கு ஒப்புதல் அளித்தது. ஆனால் அதற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்கவில்லை.
- அரசியலமைப்புச் சட்டம், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்தை மதிப்பது

ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைக் கடமை என்று சரத்து 51A(a) கூறுகிறது; தேசியக் கொடியுடன் மாநிலக் கொடியைப் பறக்கவிடுவதற்கான ஏற்பாடுகள் தேசியக் கொடி விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

விளையாட்டுச் செய்திகள்

தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை விளையாட்டுப் போட்டிகள் 2026

- புதுடெல்லியில் உள்ள தல்கடோரா மைதானத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை விளையாட்டுப் போட்டிகளை குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர்களின் தைரியம், உறுதிப்பாடு மற்றும் மீள்திறன் ஆகியவற்றை இந்த விளையாட்டுப் போட்டிகள் கொண்டாடுகின்றன.
- சிறுநீரகப் பாதுகாப்பு அறக்கட்டளை, சர் கங்கா ராம் மருத்துவமனை மற்றும் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) ஆகியவை இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர்கள் மற்றும் உறுப்பு தானம் செய்தவர்கள் என மொத்தம் 570 பேர் ஒன்றாக இணைந்து தடாசனா செய்ததன் மூலம் இது மிகப்பெரிய ஒன்றுகூடலுக்கான உலக சாதனையை படைத்தது.
- குடியரசு துணைத் தலைவர் 'ஜிந்தகி தோபாரா' நாட்காட்டியை வெளியிட்டார். அத்துடன், ஜெர்மனியின் ட்ரெஸ்டனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான உலக உறுப்பு மாற்று விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களை கவுரவித்தார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★